DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 144/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : ராகவன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.09.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th September 2025.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கீழநீலிதநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 8 வருடத்திற்கு முன்பு பனவடலிச்சத்திரம் காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 04.10.2017 ம் தேதி காலை 10.30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து போலீசார் மரிய அந்தோணி வீட்டுப்பக்கம் வைத்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், மைனர்சாமி என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 144/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : வெள்ளத்துரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.09.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th September 2025.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மீன்துள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் அய்யாச்சாமி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். 05.10.2017 ம் தேதி 15.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். 05.10.2017 ம் தேதி 15.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். மகாலட்சுமி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். 8 வருடத்திற்கு முன்பு ஒரு ஆசிரியர் வீட்டில் களவு நடந்தது சம்பந்தமாக காவல்நிலையம் சென்றிருந்தேன். அங்கு வைத்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். களவு நடந்ததாக சொல்லி கையெழுத்து

வாங்கினார்கள். மற்றபடி வேறு எதுவும் எனக்கு தெரியாது. **அய்யாச்சாமி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.8 ஆகவும், 05.10.2017 ம் தேதி 15.00 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9 ஆகவும், 05.10.2017 ம் தேதி 15.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.10 ஆகவும், மகாலட்சுமி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

கடந்த 05.10.2017 ம் தேதி மதியம் 1 மணிக்கு திருமலாபுரம் பஸ்ஸ்டாப் வடபுறம் போலீசார் வாகனத்தணிக்கை செய்யும்போது மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த எதிரி அய்யாச்சாமி என்பவரை போலீசார் மடக்கி பிடித்து விசாரித்தபோது அவர் என் முன்பும், திலீபன் என்பவர் முன்பும் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன்பின்னர் 05.10.2017 ம் தேதி 15.00 மணிக்கு திருமலாபுரம் பஸ்ஸ்டாப்பிற்கு வடபுறம் வைத்து Hero Splendor plus பதிவு எண். TN 79 D 2041 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தையும், பின்னர் அன்றையதினம் 15.30 மணிக்கு சுமார் 4 பவுன் எடையுள்ள தங்கச்செயின் ஒன்றையும், சுமார் 10 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்றையும், சுமார் 12 கிராம் எடையுள்ள சிறிய தங்க செயின் ஒன்றையும், பூ டிசைன் போட்ட சுமார் 4 கிராம் தங்க மோதிரம் ஒன்றையும் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. 21.10.2017 ம் தேதி மாலை 16.30 மணிக்கு என் முன்பும், திலீபன் என்பவர் முன்பும் எதிரி

மகாலட்சுமி என்பவரை கைது செய்து விசாரித்தபோது எதிரி மகாலட்சுமி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் அத்தாட்சிகளில் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**